எண்: 136/2024 நாள்: 29/11/2024

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## எண் 3, தேர்வாணையச் சாலை, சென்னை - 600 003.

## செய்தி வெளியீடு

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு பதவிகள்) - II தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 18.11..2024 மற்றும் 19.11.2024 ஆகிய நாட்களில் கணினி வழித் தேர்வாக நடத்தப்பட்டது.

மேற்படி தேர்வுக்கான தாள் – I மற்றும் – II ஆகியவற்றிற்கான உத்தேச விடைக்குறிப்புகள் தேர்வாணைய இணையதளத்தில் இன்று (29/11/2024) வெளியிடப்பட்டுள்ளன.

இந்த உத்தேச விடைகளின் மீது முறையீடு செய்ய விரும்பும் தேர்வர்கள் உத்தேச விடைகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் அதாவது 06.12.2024 அன்று மாலை 5.45 மணிக்குள் தேர்வாணைய இணைய தளத்தில் உள்ள “ Answer key Challenge” என்ற சாளரத்தைப் பயன்படுத்தி மட்டுமே முறையீடு செய்யலாம். இதற்கான அறிவுரைகள் வழிமுறைகள் தேர்வாணைய இணைய தளத்திலேயே வழங்கப்பட்டுள்ளன. அஞ்சல் வழியாகவும் மின்னஞ்சல் வழியாகவும் பெறப்படும் முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

A. ஜான் லூயிஸ் இ.ஆ.ப

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்